# நினைவில் நெகிழ்ந்து...!





வதுவை கூடி வல்லோர் வாழ்த்த,
சித்தப்பா பிரகதீசன் சித்தி சகுந்தலாவை,
கைத்தலம் பற்றி, இனியதாய் நிறைந்த,
இல்லற வாழ்வின் இன்பம் கொண்டு,

கனிவுடை மகள்கள் இருவர்; மகனுமாக,
பெயரன் பெயர்த்தி அணையக் கண்டு,
கொள்ளுப் பெயரனும் மடியில் தவழ,
இல்லறம் என்னும் நல்லறம் கண்டு,




இனியதாய்க் கழிந்த அறுபது ஆண்டு!
இன்றோ சித்தியின் அகவை என்பதின்
படியில் எழுந்து நிறைய மகிழ்ந்தோம்!
கடகடவெனவாய் காலம் நகர்ந்து,

மடமட வென்று மாற்றம் பிறந்து,
இல்லற வாழ்வின் அறுபாதாம் ஆண்டில்
இனியதாய் அகவை என்பதைத் தொடும்
சித்திக்கும் இறைவன் சித்திக்கும் அருளாய்,



எத்திக்கும் புகழ்கூடி எங்கள் சித்தப்பா
முத்தாய் நிறைந்திட முகவரி செய்தார்!
நெற்றியின் திலகமாய் நிறைந்த மூத்தவள்!
பற்றிய வாழ்வில் படர்ந்த பாஸ்கரன்,

வெற்றியின் மகனாம் ஆதியும் பிறந்து,
ஷ்ரியாவைக் கைத்தலம் பற்ற ருத்ரா
இளையவள் செந்தாமரை இயைந்த பாபு,
இனிய மகளாய், கலையின்செல்வி அஜு!



அன்னவன் தம்பி தாத்தாவின் பெயரோடு,
இறைவனின் அரசனாம் சாமிநாதனாய்,
இல்லறம் கொள்ள நிவேதிதாவுடன் இணைந்து,
இனிய மக்கள் இருவர் ஆக, சக்தியாம் மகளே!

இளவரசனாய் எழுந்து நிறைந்த ரிஷிகேஷ்!
தளமாய் மனதில் நினைவுகள் நெய்து,
உளமார மகிழ்ந்து உன்னத நினைவாய்,
களிப்பில் மகிழ்ந்து, கடவுளை வேண்டி,



இனியதாய் இன்னும் பலநாள் மண்ணில்,
இன்பமாய் இருவரும் வாழ்தல் வேண்டும்!
இன்னும் சிலராய் கொள்ளுப் பிள்ளைகள்,
இனியதாய்க் கண்டு நிறைய வேண்டும்!

**அன்பில் நெகிழ்ந்து,**
**கு.ப. அசோகன், மங்கையர்க்கரசி, பாலாஜி-சத்யா, ஸ்ரீராம், யாழினி**யுடன் **செல்வசுந்தரம்**
02-12-2021